# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கம் .</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண் | - | OS.16/2014 | வா.சா./பி.வா.சா. | - | வா.சா.1 |
| பெயர் | - | வெங்கடேசன் | தந்தை பெயர் | - | கோவிந்தசாமி |
| கிராமம் | - | கிருஷ்ணாபுரம் | வட்டம் | - | செங்கம் |
| தேதி | - | 09.06.2026 | வயது | - | 66 |

1969 ம் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 44 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதி உரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்.

<u>முதலாம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

2. எனது தகப்பனார் கோவிந்தசாமி என்கிற மன்னாங்கட்டி நாயுடு என்றால் சரிதான். எனது தகப்பனார் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறப்புற்றார். அவர் இறப்பதற்க்கு முன்பு அவருக்கு பாத்தியப்பட்ட அணைத்து சொத்துக்களும் அவருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான 4 பிள்ளைகளும் எவ்வளவு காலக்கட்டம் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் 10 ஆண்டுகள் ஆகும். அதற்கு பிறகு தான் 1990 வா.சா.ஆ. 1 இல் படி பாக பிரிவிணை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். முதலாம் பிரதிவாதிக்கு 70 செண்ட் பாகமாக கொடுக்கப்பட்டது. இரண்டாம் பிரதிவாதிக்கு பாகப்படி 70 செண்ட் கொடுக்கப்பட்டது. எனக்கு சொந்தமான பாகமானது வா.சா.ஆ. 1 -ல் சி - அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் டி - அட்டவணை சொத்து இரண்டாம் வாதி முன்னுசாமிக்கு பாகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை விட்டு சென்ற சொத்தை நாங்கள் நால்வரும் சமமாக பங்கீடு செய்து கொண்டோம் என்றால் இல்லை பிரதிவாதிகளுக்கு தண்ணீர் பாயும் இடம் என்பதால் தலா 70 செண்ட் நிலங்களும் எனக்கும் முனுசாமி இருவருக்கும் மேட்டு இடம் என்பதால் இருவருக்கும் சேர்த்து 1 ஏக்கர் 40 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது.

3. வாதிகளான எங்கள் இருவருக்கும் பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 1 ஏக்கர் 40 செண்டில் தலா 70 செண்ட் ஒவ்வொருவருக்கும் பாத்தியம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 எழுதப்பட்ட நாளிள் இருந்து அவர்அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 15 என்ற ஆவணத்தை 11.02.2026 ல் குறியீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கு

தாக்கல் செய்யும் பொழுது வா.சா.ஆ. 15 குறித்து வழக்கில் சொல்லவில்லை என்றால் வழக்கில் சொல்லியுள்ளேன். மீண்டும் சாட்சி வா.சா. ஆ. 15 ஆவணத்தை பாத்துவிட்டு ஆவணத்தை குறித்து வழக்கில் சொல்லவில்லை என சாட்சியம் அளிக்கிறார். வா.சா. ஆ. 15 - 1984 ல் பதிவு செய்யப்பட்டு ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் பதிவு எண் 1018/1984 ஆகும். வா.சா.ஆ. 15 – ல் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் குப்புசாமி மகன் முனுசாமி, நாரயணசாமி மகன் முனுசாமி ஆகும். இந்த ஆவணம் ஒன்றார் பிரதிவாதியின் மணைவி சாந்தா என்பவரின் பெயரிலும், இரண்டாம் பிரதிவாதி மணைவி அம்பிகா என்பவரின் பெயரிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா. ஆ. 15 ல் புல எண். 2/3 ல், 83 1/2 செண்ட், 2/1 ல் 59 செண்ட் நிலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ. 17 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் விவரம் எனக்கு தெரியாது. இவ்ஆவணம் ஆனது வா.சா.ஆ, 15 தாக்கல் செய்வதற்க்கு முன்போ என் தரப்பிற்கு தகவல் கொடுக்கப்பட்டு பி.சா.ஆ. 17 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா. ஆ. 1 மற்றும் வா.சா.ஆ,15 ஆகிய ஆவணங்களுக் சுமார் 8 ஆண்டுகள் முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் பி.சா.ஆ. 17 என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி நாயுடு மகன் கோபல் நாயுடு அவரது மணைவி சென்னம்மாள் ஆகியோர்களை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும் . புல எண். 2/3 ல் உள்ள 1.67 செண்ட் நிலம் மற்றும் அதில் உள்ள கிணறு ஒன்று கவலைப்பாடி சொத்து மேற்ப்படி சென்னம்மாள் மற்றும் கோபால் நாயுடுக்கு சொந்தமானது என்றால் இல்லை.

5. பி.சா.ஆ. 17 ஆனது வா.சா.ஆ. 15 க்கு 2 ஆண்டுகளுக்கு முத்தைய ஆவணம் என்பதும் அதனால் தான் கோபால் நாயுடு, சென்னாம்மாள் இருவரரும் அவர்களுக்கு பாத்திப்பட்ட புல எண் 2/3 ல் உள்ள இடத்தையும் மற்றும் கிணறையும் அடமானம் கட்டியுள்ளார்கள் என்றால் எங்கள் சொந்தமான சொத்தை அவர்கள் அடமானம் காட்டியுள்ளார்கள். அந்த காலகட்டத்தில் புல எண் 2/3 ல் உட்பட்ட 1.67 செண்ட் வாதிகளான உங்களுக்கோ, பிரதிவாதிகளான உங்களது சகோதரர்களுக்கோ, தகப்பனாருக்கோ உரிமம் இல்லை என்றால் சரியல்ல. கோவிந்தசாமி என்கிற மன்னாங்கட்டி நாயுடுக்கு தான் புல எண். 2/3 ல் உள்ள 1.67 செண்ட் உரிமம் உள்ளதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையின் அப்பா பெயர் கோபால் நாயுடு. கோபால் நாயுடு குமாரர் கோவிந்தசாமி நாயுடு என்கிற மன்னாங்கட்டி நாயுடு என்பார்க்கு தான் மேற்படி சர்வே எண் 2/3 ல் உள்ள 1.67 செண்டு சொந்தம் என்பதற்கு ஆவணங்கள் செய்துளேனா என்றால் ஆவணங்கள் தாக்கள் செய்துளேன் பவுத்தி பட்டா ஒன்று கொடுத்துள்ளேன்.

6. நான் சொல்வது போல கோபால் நாயுடு குமாரர் கோவிந்தசாமி நாயுடு என்கிற மன்னாங்கட்டி நாயுடு என்பார்க்கு சொந்தமன பவுத்தி பட்டா வழக்கிற்கு பிறகு வாங்கியுள்ளேன். நான் சொல்வது தவறு எனக்கு எனது கும்பத்தாருக்கும், எனது தகப்பனாருக்கும் எவ்விதத்திலும் சர்வே எண் 2/3 ல் உள்ள 1.67 செண்டு நிலம் சொந்தம் இல்லை அனுபவத்திலும் இல்லை என்றாலும் 1998 ல் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்வரை அதில் யாருக்கும் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 2/3 ல் உள்ள 1.67 செண்டு நிலத்திற்கு அடங்கல் பதிவேடு தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 2/3 ல் உட்பட்ட வரி ரசீது தாக்கல் செல்லவில்லை. சர்வே எண் 2/3 ல் உள்ள எந்த பகுதியையும் அனுபவம் செய்யவில்லை என்பதால் அடங்கல் மற்றும் வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. சர்வே எண் 2/3 ல் உள்ள 1.67 செண்டு முழுவதும் ராமசாமி என்கிற கட்டைய நாயுடு குமாரர் கோபால் நாயுடு என்பாருக்கு தான் பாத்தியப்பட்டது என்று நிலவுடைமை அதிகாரியான தனி வட்டாட்சியரால் கொடுக்கப்பட்ட அசல் ஆவணத்தை 1ம் பிரதிவாதி பி.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. இந்த புல எண் 2/3 ன் உரிமையாளர் பெயர் கோபால் நாயுடு, எனது தந்தை வழி பாட்டனார் பெயரும் கோபால் நாயுடு என்பதால், கோபால் நாயுடு பெயரை உபயோகப்படுத்தி தவறாக பயன்படுத்தி தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் இல்லை. கோபால் நாயுடு பெயரால் தான் வா.சா. ஆ. 1 ல் தவறாக எங்களுக்கு வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டதாக தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண் 2/3 ல் உள்ள சொத்துக்களை தவிர வா.சா.ஆ. 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சொத்துகள் தான் என் தந்தைக்கு உரிமையாக சொத்துக்கள் என்றால் சரியல்ல. இந்த புல எண் 2/3 உள்ள சொத்துக்களை தவிற்த்து மற்ற சொத்துக்களை பார்த்தால் நால்வருக்கு சமமாக உள்ளது என்றால் சரியல்ல, சமாக பாகம் பிரிக்கவில்லை.

8. எனது தந்தை வாய்மொழியாக பாகம் பிரிக்கும் போது நான் சிறு பையனாக இருந்தேன் வா.சா.ஆ. 1 பதிவு செய்யும் போது எனக்கு திருமணம்

செய்யப்பட்டிருந்தது.  தொராயமாக எனது தந்தை பாகம் பிரிக்கும் போது எனக்கு 12 முதல் 15 வயது இருக்கும். எனக்கும் முனுசாமிக்கும் 2 வயதுகள் தான் வித்தியாசம். இவ்வழக்கில் நான் எனது தந்தை வாய்மொழியாக பாகம் பிரித்ததை குறித்து நான் சொல்லவில்லை.  வா.சா. ஆ. 15 மற்றும் பி.சா.ஆ. 17 புரிந்துக்கொண்டு எனது தந்தை வாய்மொழியாக சொத்தை பிரித்தாக புதிதாக வழக்கில் இல்லாததை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  வா.சா.ஆ.1 ல் வாய்மொழியாக பாக பிரிவினை செய்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை வாய்மொழியாக பாக பிரிவிணை செய்யும் போது வழக்கு சொத்தில் கிணறு இருந்தது. வாய்மொழியாக பாக பிரிவிணை செய்யயும் போது கிணற்றில் பாதி பாகம் எனக்கும் பாதி பாகம் முனுசாமிக்கும் கொடுக்கப்பட்டது.

9. மேற்படி கிணற்றில் பம்புசெட் அமைப்பதற்க்கு நான் மின் வாரியத்திடம் மனு கொடுத்துள்ளேன். வழக்கு போடுவதற்கு முன்பே  5 - எச்.பி இணைப்பு கேட்டு மனு கொடுத்து ஆனால் எங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. தாவா கிணற்றை பயன்படுத்துவதில்லை மழையை நம்பி தான் பயில் வைக்கிறேன். நான் தாவா சொத்தை எந்த காலத்தில் பயிர் வைக்கவில்லை என்றால் சரியல்ல.  தாவா கிணற்றிக்கு 1ம் பிரதிவாதி அவரது பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி என்ன செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது அணைத்தும் தவறு அணைத்து ஆவணங்களும் 1ம் பிரதிவாதி பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் அவர் பெயரில் தவறாக வழங்கப்பட்டுள்ளது. நான் சொல்வது அணைத்தும் தவறு 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனது வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை இல்லை.)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, சாட்சி சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் 09.06.2026 ம் தேதி கையெழுத்து செய்துள்ளார்.

ஓம்/- R.S.பிரகந்தா.
மா.உ.நீ., செங்கம்.